# விலைமனுக் கோரல்

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## இலங்கை சுங்கத் திணைக்களம்

இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் அரசுடமையாக்கப்படுகின்ற வாகனங்கள் கொள்கலன்கள் மற்றும் பரிசீலனைகளுக்கு உட்படுத்தப்படுகின்ற மோட்டார் வாகனங்கள் மற்றும் கொள்கலன்களை நிறுத்து வைப்பதற்கு 2026.07.01 ஆம் திகதி முதல் 2029.06.30 ஆம் திகதி வரை மூன்று வருட காலத்திற்கு காணியொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெற்ற விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன. (கடிதக் கோப்பு இலக்கம் - CUS/LOG/S/20/2025-01)

01. இதற்காக கீழே காட்டப்பட்டுள்ள தகுதிறன்களுக்கு அமைவாக வசதிகளை வழங்கக்கூடிய விண்ணப்பதாரர்களுக்கு விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

    I. வாகன முனையம் குறைந்தபட்சம் இரண்டு ஏக்கர் காணியொன்றை கொண்டதாக இருத்தல் வேண்டும்.
    II. காணியின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரினால் காணி உறுதி, குத்தகை ஒப்பந்தம் அல்லது ஏனைய சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
    III. முனையமானது கொழும்பு துறைமுகத்திலிருந்து 20 கிலோ மீற்றருக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
    IV. வாகன முனையத்திற்கு கொண்டுவரப்படுகின்ற வாகனங்கள் மற்றும் கொள்கலன்களை தடையின்றி போக்குவரத்து செய்யக்கூடியவாறு பொருத்தமான அணுகுகை வீதி வசதிகள் இருத்தல் வேண்டும்.
    V. முனையமானது முழுமையாக உள்ளடக்கக்கூடிய CCTV கெமரா தொகுதியை கொண்டிருத்தல் வேண்டும். (குறிப்பு 01)
    VI. கொண்டுவரப்படுகின்ற வாகனங்களையும் கொள்கலன்களையும் பரிசீலனை செய்யும் வசதிகளை கொண்டதாக இருத்தல் வேண்டும்.
    VII. பொருட்களை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் ஃபோக் லிப்ட் மற்றும் ஸ்டேக்கர் வசதிகளை வழங்குனர் கட்டணமின்றி பெற்றுத்தருதல் வேண்டும்.
    VIII. தேவையான சந்தர்ப்பங்களில் ஒப்பந்ததாரரினால் மனித ஊழியத்தை கட்டணமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
    IX. களஞ்சிய பிரதேசம் - மூடப்பட்ட பிரதேசம் சுமார் 50,000 சதுர அடிகளை கொண்டதாக இருத்தல் வேண்டும். எஞ்சிய பிரதேசம் மூடப்படாத பிரதேசமாக இருத்தல் வேண்டும். மூடப்பட்ட பிரதேசத்தில் குறைந்தபட்சம் 10,000 சதுர அடிகளைக் கொண்ட பிரதேசம் 06 மீற்றர் உயரத்தைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். (குறிப்பு 01)

X. அலுவலர்களுக்கு அலுவலகம் ஒன்று இருக்க வேண்டிய அதேவேளையில், உதவித் தடுப்பு உத்தியோகத்தர் இருவருக்கும் சுங்க பரிசோதகர் இருவருக்கும் தங்குவதற்கும் உணவை பெற்றுக்கொள்வதற்கும் வசதிகளை கொண்டதாகவும் இணைப்பு கழிவறை வசதிகளை கொண்டதாகவும் ஓய்வு அறைகள் இரண்டை கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். அந்த இட வசதிகள் 1,000 சதுர அடிகளை விட குறைவாக இருத்தல் கூடாது. (குறிப்பு 01)

XI. குறைந்தபட்சம் அலுவலர்களினதும் சேவைநாடிகளினதும் 10 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு இட வசதிகள் இருத்தல் வேண்டும். (குறிப்பு 01)

XII. முழு காணியையும் சுற்றி குறைந்தபட்சம் 12 அடி உயரத்திற்கு மதிலையும் அதற்கு மேலாக 02 அடி உயரத்திற்கு கம்பி வலைகளினால் பாதுகாப்பு செய்தல் வேண்டும். (குறிப்பு 01)

XIII. முனையத்திற்கு தார் போடப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் மழைநீர் வழிந்து ஓடுவதற்கு பொருத்தமான விதத்தில் வடிகால் தொகுதி இருத்தல் வேண்டும். (குறிப்பு 01)

XIV. தீ விபத்து, இயற்கை விபத்து மற்றும் கலவரம் உள்ளிட்ட முழுமையான காப்புறுதிப் பாதுகாப்பு வழங்கப்படுதல் வேண்டும். (குறிப்பு 01)

XV. 24 மணித்தியாளங்கள் முழுவதும் சேவையை வழங்க கூடியதாக இருத்தல் வேண்டும்.

XVI. 24 மணித்தியாளங்களும் வாரத்தில் 7 நாட்களும் பாதுகாப்பு சேவையை வழங்குதல் வேண்டும்.

XVII. வாடிக்கையாளர் விருந்தோம்பல் பற்றிய சிறந்த புரிந்துணர்வை கொண்ட குறைந்தபட்ச பதவினர்களை சேவையில் ஈடுபடுத்துதல் வேண்டும்.

குறிப்பு 01 - ஒப்பந்தத்தை வழங்குகின்ற சந்தர்ப்பத்தில் இந்த வசதிகள் இல்லையாயின், ஒப்பந்தத்தை வழங்கி 30 நாட்களுக்குள் உரிய வசதிகளை வழங்க முடியும்)

02. விலைமனு அட்டவணையில் 1 ஆம் பிரிவில் உள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக விலைமனு ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். சகல விலைமனுக்களையும் ரூபா 70,000.00 விலைமனு பிணையொன்றைக் கொண்டதாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு மேலதிக தகவல்கள் தேவைப்படுமாயின் தொலைபேசி இலக்கம் 011-2221680 ஊடாக சுங்க பணிப்பாளிடமிருந்து (சேவை வழங்கல்) பெற்றுக்கொள்ள முடியும். அதேபோன்று .04..05.2026. ஆம் திகதி முதல்..22.05.2026. ஆம் திகதி வரை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை திருப்பி செலுத்தப்படாத ரூபா 3,000.00 வைப்புத் தொகையொன்றை செலுத்தியதன் பின்னர் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதன் மூலம் இதற்காக ஆர்வத்தை தெரிவிக்கின்ற விலைமனுதாரர்களுக்கு தயாரிக்கப்பட்ட விலைமனு ஆவண தொகுதியொன்றை கொள்வனவு செய்துகொள்ள முடியும். அதற்காக காசாக மாத்திரமே கொடுப்பனவை செய்ய முடியும்.

04. சகல விலைமனுக்களும் சுங்கப் பணிப்பாளர் (சேவை வழங்கல்) சேவை வழங்கல் பிரிவு, 6 ஆம் மாடி, சுங்க இல்லம், இலக்கம் 40, பிரதான வீதி, கொழும்பு 11 எனும் முகவரிக்கு 2026.05.25 ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவு தபாலில் அனுப்புதல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில், சேவை வழங்கல் பணிப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகை பெட்டியினுள் இடப்படுதல் வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு பின்னர் கிடைக்கின்ற விலைமனு ஆவணங்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் இடப்பட்டு அனுப்பப்படுகின்ற கடித உரையின் இடது பக்க மேல் மூலையில் “வாகனங்களையும்

கொள்கலன்களையும் நிறுத்தி வைப்பதற்கு பொருத்தமான இடமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக் கோரல்” எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

05. மேலும் 2026.05.25 ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணிக்கு இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுகின்ற அதேவேளையில், அதற்காக தங்களுக்கு அல்லது தங்களது அதிகாரத்தைப் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு அதில் கலந்துகொள்ள முடியும்.

06. தங்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் சுங்கப் பணிப்பாளருக்கு உரியதாகும்.

தலைவர்,
திணைக்களத்தின் பாரிய அளவு பெறுகைக் குழு,
இலங்கை சுங்கம்,
சுங்க இல்லம். இல. 40
பிரதான வீதி, கொழும்பு 11